விருதுநகர் தெற்கு மாவட்டம் பாலவனத்தம் ஊராட்சியில் முதலமைச்சர் ஆணையின்படி தமிழக மக்களுக்கான பொங்கல் தொகுப்பினை மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் சேர்மன் சுப்புராஜ், சிவப்பிரகாசம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, தி.மு.க. பொருளாளர் கே.வி.கே.பிரபாகரன், நகர தி.மு.க. செயலாளர் ஏ.கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி ஆகியோர் இருந்தனர்.

தமிழக முதலமைச்சர் அவரின் ஆணையின்படி தமிழக மக்களுக்கான பொங்கல் தொகுப்பினை விருதுநகரில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சுகபுத்ரா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ். மாதவன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி. மதியழகன், ஆர். சுதாகர், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி. ராஜகுரு, நகர அவை தலைவர் ஸ்ரீ ராம், காசிராஜன், நகர துணை செயலாளர் ஏ.எஸ்.கே. ரமேஷ் குமார், வடக்கு மாவட்ட விவசாய அணி நேஷனல் ராமர், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி எல். திருமாறன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம் டூவிபுரம் நியாய விலைக் கடையில் தமிழக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ.3000 ரொக்கம் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றை வழங்கினார் மாநகர செயலாளர் ஆனந்த சேகரன், மாமன்ற உறுப்பினர் அதிஷ்டமணி, அண்ணா நகர் பகுதி செயலாளர் ரவீந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி திருச்செந்தூர் ஒன்றியம் அம்மன் புரத்தில் தமிழக மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு அரசின் பொங்கல் தொகுப்பு பொருட்கள் மற்றும் ரூ 3000 வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை. மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பில்லா ஜெகன், நகரச் செயலாளர் வாள் சுடலை, விளையாட்டு மேம்பாட்டு அணி ஜனகர், வழக்கறிஞர் அணி கிருபாகரன், வி.பி.செல்வக்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

'திராவிட மாடல்' முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க "உலகம் உங்கள் கையில் மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மடிக்கணினி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.இதில் அரசு கல்லூரி (185) மேலநீலிதநல்லூர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி (149) குருக்கள்பட்டி ஐ.டி.ஐ (45) ஆகிய கல்லூரிகள் என மொத்தம் 379 மாணவ,மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.பங்கேற்று மடிக்கணினியை வழங்கினார். மடிக்கணினியை பெற்றுக் கொண்ட மாணவ, மாணவியர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியினை தெரிவித்தனர்.நிகழ்வில் சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர். கௌசல்யா, நகர்மன்ற உறுப்பினர்கள் செல்வராஜ்,ராஜா ஆறுமுகம், நகர இலக்கிய அணி அமைப்பாளர் காவல்கிளி மற்றும் கல்லூரி முதல்வர்கள் கலந்து கொண்டனர்.

இராபநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தில் நேற்று முன்தினம் (07.01.2026) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை மற்றும் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் மற்றும் ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை (மு) உறுப்பினர் செயலர், சீர்மரபினர் நலவாரியம் கலையரசி, மாவட்ட வருவாய் அலுவலர் க.சங்கரநாராயணன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் , திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம் மற்றும் நகர் மன்ற தலைவர் நகர் மன்ற துணைத் தலைவர் உட்பட கட்சி நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் திராவிடப் பொங்கல் திருவிழா டர்ஃப் (TURF) கிரிக்கெட் போட்டி அச்சம்பட்டிரோட்டில் நடைபெற்ற நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்று கிரிக்கெட் விளையாடி போட்டியை துவக்கி வைத்தார்.நிகழ்வில் இல.சரவணன், பெரியதுரை, மு.பிரகாஷ், வழக்கறிஞர் கண்ணன், பிச்சையா, சந்திரன், நகர்மன்றத் தலைவர் கௌசல்யா, காவல்கிளி,அப்பாஸ்அலி,அன்சார் அலி,காளிராஜ்,பிரபாகரன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.இதில் வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசு ரூபாய் 15,000 ம், 2 வது பரிசு ரூபாய் 10,000 ம், 3 வது பரிசு ரூபாய் 5,000 ம் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டது.



தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி18ம் கால்வாய் தண்ணீர் சூலப்புரம் பாறைக்குளம் கண்மாயில் தண்ணீர் நிரம்பியதை போடி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போடி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் லட்சுமணன் பார்வையிட்டார். உடன் சிலமலை கிராம கமிட்டி தலைவர் ரவி மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## சேலம் கிழக்கு - வாழப்பாடியில் கபடிப்போட்டி!

சேலம். ஜன.9- சேலம் கிழக்குய மாவட்ட தி.மு.க. வாழப்பாடி வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய அளவிலான மாபெரும் கபடி போட்டிசேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ் ஆர் சிவலிங்கம் எம்.பி. அவர்களின் ஆலோசனையின் படி வாழப்பாடி வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் எஸ் சி சக்கரவர்த்தி தலைமையில் வாழப்பாடி தேர்தல் பொறுப்பாளர் சேலம் கிழக்கு மாவட்ட விவசாய அணி அமைப் பாளர் ஆத்தூர் சேகர், ஏற்காடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழ்செல்வன், சேலம் கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் சீனிவாசன்.

சேலம் கிழக்கு மாவட்ட விவ சாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பழனிசாமி, வாழப் பாடி பேளூர் செயலாளர் பி.சி.செல் வம், பேளூர் பேளூர் செயலாளர் சுப்ரமணியன், வாழப்பாடி வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் சோலை கோவிந்தன், பேளூர் நகர அவைத் தலைவர் ராமகிருஷ் ணன் காங்கிரஸ் சேலம் கிழக்கு மாவட்ட துணை தலைவர் ராஜா, வடக்கு ஒன்றிய துணைச் செயலா ளர்கள் சேட்டு (எ) ஆறுமுகம், குறிச்சி பெரியசாமி, மாவட்ட பிரதி நிதி அப்பாதுரை, சேலம் கிழக்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்கள் கலைச் செல்வன், வேலவன்,வாழப்பாடி வடக்கு ஒன் றிய விவசாய அணி அமைப்பாளர் குறிச்சி நடராஜன்,அத்தனூர்பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலை வர் பாரதி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சேகர், சேசன்சாவடி கிளை செயலாளர்கள் மகாலிங் கம், ஜெயவேல், இமயவர்மன், கலியன், பழனிசாமி,

காட்டுவாப்பிலை பட்டி ஊராட்சி செயலாளர் கோவிந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட னர் இதில் 20த் திற்கும் மேற்பட்ட கபடி குழுவினர் விளையாடி அதில் முதல் மூன்று இடத்தை பிடித்த நபர்களுக்கு வாழப்பாடி வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் சக்கர வர்த்தி, ஆத்தூர் சேகர், தமிழ்செல் வர், மாவட்ட பிரதிநிதி நடுப்பட்டி ஜெயராமன், பழனி சாமி, ஆகி யோர் முதல் பரிசு ரூபாய் 10,000, இரண்டாம் ரூபாய். 7,500,மூன் றாம் பரிசு 3000, நான்காம் பரிசு 2000 வழங்கினர்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க.காசிநாதன் (எ) தமிழரசன்

சனவரி 9 (2013)

சிறுவயது முதற்கொண்டு கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

மாத்தூர் கிளைக் கழகச் செயலாளராக தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர் .

தலைமைக் கழகம்

தி.மு.க.